# பத்திரிக்கை செய்தி

## இந்திரா ஆவாஸ் யோஜனா இலவச வீடு கட்டும் திட்டத்தில் ரூ.12,500/- காசோலை வாங்குவதற்காக கையூட்டு பெற்ற பஞ்சாயத்து தலைவருக்கு தண்டனை விதித்து தீர்ப்பு

புகார்தாரர் சின்னையன், நத்துகுழிப்பட்டி, செம்மேடு, கொல்லிமலை என்பவர் இந்திராஆவாஸ் யோஜனா இலவசவீடு கட்டும் திட்டத்தில் ரூ.12,500/- காசோலை வாங்குவதற்காக அப்போதைய பஞ்சாயத்துதலைவர் திருமதி. பொன்னம்மாள், குண்டூர்நாடு பஞ்சாயித்து, செம்மேடு, கொல்லிமலை என்பவரை சந்தித்தார். திருமதி. பொன்னம்மாள், காசோலையை வழங்குவதற்கு தனக்கு ரூ.2000/- கையூட்டாக கேட்டுள்ளார். இது சம்மந்தமாக நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவால் கடந்த 08.05.2002-ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு புகார்தாரரிடமிருந்து ரூ.400/- கையூட்டாக திருமதி. பொன்னம்மாள் பெற்றபோது கைது செய்யப்பட்டார். இது சம்மந்தமாக வழக்கு விசாரணை செய்யப்பட்டு நாமக்கல் தனி நீதிபதி/ முதன்மை குற்றவியல் நீதித்துறைநடுவர் அவர்கள் முன்னிலையில் நடைப்பெற்று இன்று 22.06.2023-ம் தேதி தனி நீதிபதி/குற்றவியல் நீதித்துறைநடுவர் அவர்களால் குற்றம் உறுதிசெய்யப்பட்டு திருமதி.பொன்னம்மாள் அவர்களுக்கு பிரிவு 7 ஊழல் தடுப்புசட்டம் 1988-ன் படி 4 ஆண்டுகள் சிறை தண்டனையும் மற்றும் ரூ.1,000/- அபராதமும், பிரிவு 13(2) உ/இ 13(1)(டி) ஊழல் தடுப்புசட்டம் 1988-ன் படி 3 ஆண்டுகள் சிறை தண்டனையும் மற்றும் ரூ.5,000/- அபராதமும் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் 3 மாதம் சிறை தண்டனை என விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.